தீபம்:01

# ஆத்மஜோதி

ஒளி : 03

ஆத்மீக மாத சஞ்சிகை

ஆடி : 2005



## கோண்டாவில் குடைச்சாமியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலி - தெற்கு பிரதேச சபை
ஏழாலை உப அலுவலகம்
21 JUL 2005
பெற்றுக் கொள்ளப்பட்டது



சிவமயம்

# ஆத்மஜோதி

தாபிதம் : 1948

**ARTHMA JOTHY**

Est. 1948

ISSN 17039185

தீபம் : ஒளி

பார்திப வருடம்

ஆடி

2005

## உள்ளடக்கம்

1. மனித மேம்பாட்டுக் கல்வி 06
2. வாழ்க்கையின் அடியும் முடியும் 09
3. வல்லிபுரக் கோயில் 13
4. மகாதேவ ஆசிரமமும் ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகளும் 18
5. கந்தப்பெருமான் கருணை வெள்ளம் 27
6. வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில் வரலாறு 29
7. பெரிய புராணத்தில் சிவ வழிபாடு 34

**பதிப்பாசிரியர்**

நா. முருகையா

தியான மணிமண்டபம்

**எழுத்தமைப்பும் அச்சுப் பதிப்பும்**

ஜய்ராம் பிறின்ரேஸ்

**வெளியீடு**

ஆத்மஜோதி
தியான மணிமண்டபம்
ஏழாலை.
பதிவு இல:
HA/4/JA/199

**தொடர்பு முகவரி**

நா.முருகையா,
ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

| | | |
|---|---|---|
| பிரதி | :- | 30/= |
| வருட சந்தா | :- | 400/= |
| ஆயுள் சந்தா | :- | 3000/= |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்

தங்களின் ஆத்மஜோதி மாத இதழ் இரண்டும் கிடைக்கப்பெற்றோம் மேலும் தங்களின் பணி மிகவும் முக்கியபணியாகும். அமரர் முத்தையாவின் அளப்பரிய சாதனையில் முதன்மையான சாதனையாக விளங்குவது அத்மஜோதி சஞ்சிகையே அதை மீண்டும் வெளிவரச் செய்தமை பதிப்பாளர் நா. முருகையாவை பாராட்டக்கூடிய செயலாகும்.

தலைவர்
வே. மகாலிங்கம்
திருநகர் கிருஸ்னன் கோயிலடி
திருநெறிக் கழகம்
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமர்சனம்

தவசீலர் ஆத்மஜோதி முத்தையா அவர்களின் வெளியீடான அவருக்கு ஆத்மஜோதி என்ற பட்டத்தை 1948ம் ஆண்டு தொடக்கம் பெற்ற நா. முத்தையா ஐயாவுக்கும் இவரின் தம்பியான நா.அருமைநாயகம் நயினயம்பதியை கொண்ட K இராமச்சந்திரா அவர்களுக்கும் நன்றியைக் கூறிக் கொண்டு இன்றைய நிலையில் ஆத்மஜோதி வெளியிட்ட அன்பர் முருகையா அவர்களுக்கு நன்றிகூற எமது மக்கள் உள்ளார்கள். அவர் ஆத்மஜோதி ஐயாவுக்குகாக தனது கஷ்டங்களை ஒருபக்கம் வைத்து விட்டு அவருக்கு ஏழாலையில் சிலை நிறுவி மணிமண்டபம் அமைத்து அவருடைய ஆன்மீக வெளியீடுகளை வெளியிட்டு பாதயாத்திரைகள் செய்த அவருடைய ஆத்மஜோதி என்ற நாமம் மங்காமல் ஆத்மஜோதி சஞ்சிகை வெளியிட்டுள்ளார் ஆத்மீக தொண்டர்கள் எல்லோரும் அவருடைய வெளியீடுகளை பெற்று பயன் அடைவீர்களாக....!

ஓம் சாந்தி ஓம் சாந்தி

அடியேன்
ராம. சுப்பிரமணியம்
கொழும்பு. 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரம் தேங்காய் எண்ணெய் திரி எரிப்பதற்கு
சமன் ஒரு நல்லெண்ணெய்திரி.

ஆயிரம் நல்லெண்ணெய் திரி எரிப்பதற்கு சமன்
ஒரு நெய்த்திரி.

ஆயிரம் நெய்த்திரி எரிப்பதற்கு சமன்
ஒரு இலுப்பெண்ணெய் திரி.

இதுவும் வெள்ளை எருக்கலை பூபூர்க்கும் மரதண்டு இலை என்பவற்றில் வெள்ளைத்திரியில் ஏற்றி வீட்டில் தரிசனம் செய்ய விளக்கு ஏற்றினால் வீட்டில் நன்மைகள் ஏற்பட்டு லட்சுமி கரம் நிலவும்.

வலம்புரி சங்கு ஈசான மூலையில் வைத்து வணங்கிவரின் கடன் பிரச்சினை நீக்கி சுகவாழ்வு பெறலாம் தூய்மையாக பாவிக்க வேண்டும்.

இது திருச்சியில் ஒரு சித்தர் எமக்கு கூறியது.

தங்களின் சேவைக்குரிய
K.S. Sivarashan



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆவணி மீ விசேடநாட்களும் விரதங்களும்**

| | |
|---|---|
| 02.08.2005 | பிரதோஷ விரதம் |
| 04.08.2005 | ஆடி அமாவாசை |
| 07.08.2005 | ஆடிப் பூரம் |
| 09.08.2005 | நாக சதுர்த்தி விரதம் |
| 11.08.2005 | ஷஷ்டி விரதம் |
| 17.08.2005 | பிரதோஷ விரதம் |
| 18.08.2005 | நடேசர் அபிசேகம் |
| 19.08.2005 | பூரணை விரதம் |
| | ஆத்மஜோதி முத்தையாவின் குருபூசை |
| 23.08.2005 | சங்கட ஹரகணபதி விரதம் |
| 27.08.2005 | ஸ்ரீ கிருஸ்ண ஜெயந்தி |

**புரட்டாதி மீ விசேட நாட்கள் விரதம்**

| | |
|---|---|
| 01.09.2005 | பிரதோஷ விரதம் |
| 03.09.2005 | அமாவாசை விரதம் |
| 07.09.2005 | விநாயகர் சதுர்த்தி விரதம் |
| 09.09.2005 | ஷஷ்டி விரதம் |
| 15.09.2005 | பிரதோஷ விரதம் |
| 17.09.2005 | பூரணை விரதம் |
| 21.09.2005 | சங்கட ஹரகணபதி விரதம் |
| 30.09.2005 | பிரதோஷ விரதம் |

- நாள்தோறும் குறைந்தபட்சம் ஒரு மணிநேரமாவது ஆச்சாரியர்களையும், இறைவனையும் பற்றி சிந்தனை செய்யுங்கள்.
- சிறிது நேரமாவது ஆழ்வார்கள் மற்றும் ஆச்சாரியார்கள் அமுத வாக்குகளையும் படியுங்கள்
- தவறு என்று கண்டால் தீமையற்ற சொற்களால் அஞ்சாமல் கூறு அறிவுடைய மனிதரின் இதயம் என்பது எதனாலும் களக்கம் அடையாமல் எந்தப் பொருட்களையும் பிரதிபலிக்கும் கண்ணாடி போன்றிருக்க வேண்டும்.
- பிள்ளைகளையும் பெண்களையும் சிறுவயதிலேயே பள்ளிக்கூடம் அனுப்பவேண்டும் அப்படி அனுப்பாதவர்களை தண்டிக்க வேண்டும்
- பேச்சை விட மௌனமே சிறந்தது பேசித்தான் தீர வேண்டும் என்றால் அந்த பேச்சு உண்மை நேர்மையாய் இனிமையாய் இருக்க வேண்டும்.
- பொருள் செல்வத்துடன் அருள் செல்வத்தையும் தேடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித மேம்பாட்டுக் கல்வி

(ஆத்மஜோதி நா. முத்தையா)

தற்போது மனிதமேம்பாட்டுக் கல்வியென்ற சொற்றொடர் எல்லார் நாவிலும் உச்சரிக்கப்படுவதை நம்மால் காணமுடிகிறது அதுவும் ஆறுவயது தொடக்கம் பதினாறுவயது வரை உள்ள இளைஞர்களுக்கு மிகமிக அவசியமானது என்று கல்விமான்கள் கூறுகின்றார்கள். எதிர்காலச் சந்ததியினராவது அமைதி, சாந்தம் என்பவைகளை அநுபவிக்க வேண்டும் என்பது அவர்களது ஆசையாகும்.

இது இன்றுதான் பேசப்படுகிறதோ என்றால் அப்படியன்று உலக நாகரீகம் பெறத் தொடங்கிய காலம் தொட்டுப் பேசப்பட்டு வருகின்றது. வள்ளுவர் தனது குறளில் இரண்டாவதாக,

**"கற்றத னாலாய பயனெனக்கொல் வாலறிய**
**னற்றாள் தொழாஅர் எனின்"**

என்பதைக் கூறினார். தூய அறிவாக இருக்கின்ற பகவானுடைய நன்மை பயக்கத்தகுந்த பாதங்களை வணங்கமாட்டார் என்றால் அவர்கள் கல்வி கற்றதனால் அடைந்த பலன் என்னவோ தெரியவில்லை என்பது பொருள். நன்றாகப் படித்தவர்களாக இருந்தும் அறிவுக்கெல்லாம் அறிவாக இருக்கின்ற பகவானுக்கு வணக்கம் செலுத்த மறுக்கிறவர்களும் இருக்கின்றார்களே! அவர்கள் படித்த படிப்பு என்னபடிப்பு?

கல்வி கற்பது அறிவுக்காக நாம் எவ்வளவு கல்வி கற்றாலும் அதிலிருந்து அறிந்து கொண்ட அறிவுக்குமேல் இன்னும் அறிய வேண்டியது அறிவு இருந்துகொண்டே இருக்கிறது. அந்த அறிவின் எல்லை எங்கே முடிகிறது என்று நாடுகின்றபோது அது நாமறிந்த அறிவுக்கு எட்டாததாக இருக்கிறது. ஆகவே நாம் அறிந்து கொள்ளமுடியாத அறிவு இருந்து கொண்டே இருப்பது மட்டும் நிச்சயமாகத் தெரிகிறது. நம் அறிவுக்கு எட்டாத அந்த அறிவின் பூரணத்தைத்தான் வாலறிவன் என்றும் பகவான் என்றும் சொல்லுகிறோம். அந்தப் பகவான் என்ற பூரண அறிவிற்கு மிக மிகவும் குறைந்ததுதான் நம்முடைய அறிவு என்பதை ஒப்புக் கொள்ளாவிட்டால் நாம்கற்ற கல்வியின் பயன் என்னவோ? ஒப்புக் கொண்டால் அதற்கு வணங்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை மாணிக்கவாசகர்

> **"இன்னுழை கதிரின் துன்னணுப் புரையச்**
> **சிறியவாகப் பெரியோன்"**

என்று கூறுகின்றார். வீட்டுக்குள் காற்றில் மிதந்து கொண்டிருக்கிற தூசிகள் போன்றவை பூமி, சந்திரன், சூரியன் முதலிய கோளங்கள். தூசிகள் நமக்கு அற்புதமானவைகளாகத் தோன்றுவது போன்று இறைவனுக்கு அண்டகோடிகள் அற்பமானவைகளாம் இறைவனைப்பற்றிய பேருணர்வும் வரும்போதுதான் இறைவனைப்பற்றிய பெருமையை அறியமுடியும்.

மனிதனை மேம்படுத்துவது ஆத்மீக உணர்வும், ஆத்மீக கல்வியுமாகும். நாம் எதை அறிந்து கொண்டால் எல்லாம் அறிந்ததாகுமோ அதுதான் ஆத்மா என்பது தன்னை அறிந்தவன் தலைவனை அறிவான். ஒருமுறை தேவர் உலகத்தில் வியாழபகவான் மேற்கூறிய கருத்தைச் சொன்னார். இதனைக்கேள்வியுற்ற தேவர்கள் தமது சார்பாக தேவேந்திரனையும், அசுரர் சார்பாக விரோசனனையும் அனுப்பிவைத்தனர். விரோசனன் இந்த உடம்புதான் ஆத்மா என்றும் இதனைப் போஷிக்கும் அளவிற்கு நீங்கள் நன்மை பெறுவீகள் என்றும் கூறினான் தேவேந்திரன் பலகாலம் வியாழபகவானோடு உடனுறைந்து. ஆத்மீக உணர்வைப் பெற்றுத் தேவர்களுக்குக் கூறினான் இதனைக் கேட்ட தேவர்கள் உய்ந்தனர்.

ஆனால் விரோசனனிடம் அசுரபுத்தி தொழிற்பட்டது போன்று நம்மிடமும் அசுரபுத்தி தொழிற்படுகிறது. அதனால் உடம்பு தான் சாசுவதமானது என்று கருதி வாழ்நாள் முழுவதையும் உடம்பிற்காகவே செலவிட்டுக் கொண்டிருக்கின்றோம். ஆத்மாவைப் பற்றி சிறிதும் சிந்தியாதவர்களாய் தினமும் ஆத்மாவைக் கொலை செய்து கொண்டிருக்கின்றோம். பட்டமும் பதவியும், பணமும் புகழும் ஆத்மாவை மேம்படுத்துவதில்லை. பக்தி ஒன்றினாலே தான் ஆத்மீக மேம்பாட்டை நாம் உணரமுடியும்.

கல்விகற்கும் சிறார்களுக்கு ஏழு வயதுக்கும் பதினாறு வயதுக்குமிடையில் மனிதமேம்பாட்டுக்கான ஆத்மீக கல்வியைப் புகட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். சமயபாடத்தை முக்கிய பாடமாக கற்பித்த இலங்கையில்தான் காரணமில்லாத கொலைகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. காரணம் ஆத்மீகத்தை அறிந்தவர்களாலோ அன்றி அதனைச் சாதனைப்படுத்து கிறவர்களாலோ பாடசாலைகளில் போதிக்கப்படுதில்லை. வீபூதியில் நம்பிக்கையில்லாத ஆசிரியர் வீபூதியைப் பற்றி படிப்பிக்கின்றார். மாணவன் கேள்வி கேட்டால் எனக்கு உதில் எல்லாம் நம்பிக்கை இல்லை. பரீட்சையில் சித்தியடைய வேண்டுமானால் அதனைப் பாடமாக்கி எழுது என்கிறார்.

பாடசாலையிலேயே ஆன்மீக உணர்வு கொலைசெய்யப்பட்டுவிட்டது. இன்றைய இளைஞர்களின் நிலைமைக்கு ஆசிரிய சமூதாயமே முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். பிரான்சில் ஒரு காலத்தில் ஒரு சட்டம் இருந்தது. அதாவது ஒருவன் இன்னொருவனைக் கொலை செய்தால் கொலை செய்தவனைப் படிப்பித்த ஆசிரியரே அத்தண்டனையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது தான் அந்தச்சமட்டமாகும். இந்தச்சட்டம் நம் மத்தியில் அமுலாக்கப்பட்டால் எத்தனை ஆசிரியர்கள் உயிரோடிருப்பார்கள் என்பதை இறைவன் ஒருவரேதான் அறிவார்.

சமயபாடத்திலும், பிழையில்லை; மாணவர்களிலும் பிழையில்லை, கற்பித்தவர்களில்தான் முழுப்பிழையுமாகும். இன்றைய நிலையில் மக்கள் உள்ளம் பண்பட சமயம் அவசியம். சமய உண்மைகள் மக்கள் இரத்தத்தில் ஊற சமயசாதனை அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையின் அடியும் முடியும்

(இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை)

"யாதும் ஊரே யாவருங் கேளிர்" என்று தொடங்கும் பாடல் புறநானூறு முழுவதிலும் மிகமிக உச்சமானதொரு பாடல்.

'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்பது மேலே குறிப்பிட்ட பாடலின் இரண்டாவது அடி. இந்த இரண்டாம் அடிதான் குறிப்பிட்ட பாடலின் உயர்நிலை: பல்லவி. இந்தப் பல்லவியில்,

'தீது பிறர்தர வாரா, என்பது வாழ்க்கையின் அடிநிலை.

'நன்று பிறர்தர வாரா' என்பது வாழ்க்கையின் முடிநிலை. இந்த முடிநிலை பற்றிப் பொறுத்துச் சிந்திப்போம்.

முதற்கண் 'தீது பிறர்தர வாரா' என்பதை எடுத்துக் கொள்ளுவோம்.

**வாழ்க்கையின் அடிநிலை**

நாம் இப்பிறப்பில் அநுபவிக்கும் துன்ப அநுபவங்கள், முந்திய பிறப்புக்களில் நாம் சம்பாதித்த சம்பாத்தியங்களேயாம் இவை பிராரத்தம் எனப்படும். இப்பிராரத்தத்தை ஊட்டுவோன் இறைவன். ஊட்டுவோன் இறைவன் என்பதைச் சொல்லளவில் வைத்துக் கொண்டு. பிராரத்தமாகிய துன்பங்கள் வரும் வாய்தல்களை நோகின்றோம். வாய்தல்களை நோதல் மகாமகா தப்பு.

**விளக்கம்**

ஒருவன் நமக்கு அடிக்கின்றான் என்று வைத்துக் கொள்ளுவோம். நம் சம்பாத்தியம் அவனுக்கூடாக வருகின்றது: "இறைவன் அவனுக்கூடாக வரச்செய்கின்றான்" என்பதே உண்மை.

இந்த உண்மையை உணராமல் தீதாகிய துன்பம் வரும் வாய்தல்களை நோவது, எய்தவனிருக்க அம்பை நோவதாம். வாய்தல்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோதல் ஆகாமியமாய் வரும் பிறப்புக்களில் துன்புறுதற்று இப்பிறப்பில் வித்திட்டுவைப்பதாயிருக்கும்.

**ஒரு உதாரணம்**

கோவலன் கொலையுண்டான்: கொலைக்கு வாய்தலாயமைந்த பாண்டியனை முனிந்தாள் கண்ணகி.

இக்கண்ணகி, தெய்வக் கண்ணகியாக மாறித் தெய்வநிலை எய்திய போதுதான் கோவலன் சம்பாத்தியமே அஃதாவது அவன் செய்துவைத்த தீதே அவன் மரணத்துக்குக் காரணம் என்பதை உணர்ந்தாள்.

**"தென்னவன் தீதிலன்**
**தேவர்கோன் தன்மனை**
**நல்விருந் தாகினான்"**

என்கின்றாள் தெய்வக் கண்ணகி

அன்றி, வாய்தலாகிய பாண்டியனை முனிந்த பாவத்தால் "பெயர்த்தும் பெயர்த்தும் பிறப்பால்" என்றுங் கூறுகின்றாள். காலத்தில் தெய்வநிலை நீங்கிப் பிறவி எடுக்க நேரிடும் என்பது அவள் கருத்து. "துன்பம், அநுபவம், நம் சம்பாத்திய விளைவு என்பன அறிவது எளிதன்று" என்பது கண்ணகி மூலம் தெளிவாகின்றது.

மகா தத்துவர்களான முனிவர்கள் நிலத்தில் குதிக்கால் படாமல், கிந்திக் கிந்தி நிலத்தை நோக்கியபடி நடப்பார்கள். நிலத்தில் ஊரும் செந்துக்களுக்கு தம்மால் தாம் முண்டாகாமைப் பொருட்டே அவ்வாறு நடக்கின்றார்கள்.

தம்மால் உயிர்களுக்கு தாக்கம் ஏற்படுமானால் அது ஆகாமியமாய் வரும் பிராணிகளுக்கு வித்தாய்விடும் என்பது அவர்கள் நன்கு உணர்ந்தது.

**"உற்றநோய் நோன்றல் உயிருக்கு குறுக்கண் செய்த**
**அற்றே தவத்திற்கு உரு"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவம் இரண்டு முக்கிய அம்சங்கள் கொண்டது. முதலாவது அம்சம்: "உற்ற நோய் நோன்றல்", அஃதாவது, தன்சம்பாத்தியமாய் அநுபவத்திற்கு வந்த பிராரத்தமாகிய துன்பத்தை, ஆகாமியம் விளையாமல் அனுபவித்தல்.

இரண்டாவது அம்சம்: "உயிருக்கு உறுகண் செய்யாமை". உறுகண்- துன்பம். தம்மால் பிற உயிர்க்கு உறுகண் விளையுமானால் அது ஆகாமிய வித்தாய்விடும். ஆகவே ஆகாமியம் விளையாமல் பிராரத்தத்தை அநுபவிப்பதாம் என்றவாறு.

இவ்வாறு நடக்கும் தவத்தவர்களைத் "தம்மைத் தாம் காதலர்" என்கின்றார் வள்ளுவர். காதல் - அன்பு. ஒவ்வொருவரும் தம்மேல் தாம் அன்புடையராதல் வேண்டும் என்பது கருத்து.

வள்ளுவர் ஒவ்வொருவரையும் நோக்கி "நீ உன்மேல் அன்புடையையாயிரு" என்கின்றார்.

"நீ எவ்வுயிர்க்கும் அன்பாயிரு" என்ற போதனையை அடுத்தபடியில் வைத்துக் கொண்டு, "நீ உன்னுயிரில் அன்பாயிரு" என்பதற்கே முதன்மையான முக்கியத்துவம் அளிக்கின்றார் வள்ளுவர்.

**'தன்னைத்தான் காதலனாயின் எனைத்தொன்றும்**
**துன்னற்க தீவினைப் பால்'**

என்பது அருமையான குறள்.

ஒருவன் தன்மேல் தான் அன்புடையனாயின் எந்த ஒரு உயிருக்கும் தீவினைபாலின் விளைவாகிய துன்பம் விளையாமல் நடப்பான் என்ற வாறு,

தீவினைப் பால், தீவினையின் விளைவாகிய துன்பப் பகுதிகள் - சொல்லால், செயலால், நினைவால், பலவேறு தந்திர வகையால் மற்றை உயிர்க்குத் துன்பம் விளையலாம்.

தம்மேல் அன்பில்லாதவர்கள், தாம் பிறர்மேல் அன்புடையர் என்று தம்மைத் தாமே ஏமாற்றிகின்றார்கள். பகிரங்க உலகில் இந்த முழு மக்களையே கண்ணாரக் காண்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மால், மற்றையுயிர்கள் துன்புறும் போது, அவ்வுயிர்களின் நன்மைக்கே, தாம் இந்த அருமந்த கைங்கரியத்தைச் செய்கின்றோம் என்று பறை அறைவதில் அவர்கள் தவறுவவில்லை.

துன்புறுவோர் நிலையிலும் துன்புறுத்துவோர் நிலை பொல்லாதது என்பதை அறியும் அறிவு அவர்களுக்கு இல்லை.

துன்புறுவோர், துன்பம் தம் சம்பாத்தியம் என்பதை உணர்ந்து இந்தப்பிறப்பிலேயே சாந்தி அடையலாம்.

துன்புறுவோருக்கு, எத்தனைப் பிறவிகளெடுத்தும் சாந்தி பிறப்பதற்கு வழியில்லை.

இறைவனுக்கும் அவன் வழி நிற்கும் இயமதருமருக்குமே (உயிர்களின் நன்மைப் பொருட்டு) துன்புறுத்தும் அதிகாரம் உண்டு மற்றெவருக்கும் அந்த அதிகாரம் இல்லை.

ஆகவே துன்புறுவோர் நிலையிலும், துன்புறுத்துவோர் நிலையே பரிதாபத்திற்குரியது அவர்கள் குற்றம் உய்தியில் குற்றம்; அறியாமையின் மிகுதிப்பாட்டால் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்ளும் குற்றம் அக்குற்றம். அக்குற்றம் மிக்க சாதுரியவான்கள் பால் வஞ்சகத்தோடு கூடியிருக்கும்: அவர்கள் மனம் மாசாகிய பாசி படிந்திருக்கும்.

மனத்துக்கண் - மாசுள்ளார் - தம்மேல்தாம் அன்பிலாதார் - என்பவர்களின் செயற்பாடுகள், அஸ்த்திபாரமில்லாத மேன்மாடிக் கட்டிடங்கள் போல்வதாம்: தம்மையும் தம்மைத் தொடர்பவர்களையும் ஒரு சேரத் தகர்த்துவிடுபவர்கள்.

**சாரம்**

துன்ப அநுபவங்கள் நம் சம்பாத்திய விளைவுகள்: அவை வருந்தானங்கள் வெறும் வாய்தல்கள்.

உயிர்களுக்கு உறுகண் விளையாமல், பிராரத்தத்தை அநுபவிக்கும் வாழ்வு தவ வாழ்வு: அவ்வாறு வாழ்பவனே தன்னைத் தான் காதலன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்புறுவோன் எடுத்த பிறப்பிலேயே சாந்தியடைய வழியுண்டு: துன்புறுத்துவோனுக்கு எப்பிறப்பிலும் சாந்திக்கு வழியில்லை.

இவ்வாற்றல் வாழ்க்கையின் அடிநிலையாகிய மூலாதார அத்திபார தத்துவம் தெளிவாகலாம்.

# வல்லிபுரக் கோவில்

சிங்கைநகர்: செங்கதிரோன்
புலோலி

**மாயவமு ராந்தகநேர் வல்லிபுரக் கோயிலுறை**
**தூயவவெற் கீவதென்றோ தொல்வனத்து - பாயமுனர்ந்**
**தெய்வதுறைமா ரீசனைக்கொன் றிவ்விலங்கை யேகநெறி**
**செய்தவிறன் மாதவநின் சீர்.**

- வல்லிபுரமாயவன் மும்மணிமாலை

யாழ்ப்பாணத்தின் புராதன விஷ்ணு தலங்களிலொன்றுதான் வல்லிபுரம் ஆழ்வார் சுவாமி கோயில். இங்கே ஷேத்திரியாயிருப்பவன் திருமால். கோவில் என்றால் சிதம்பரம், ஸ்ரீரங்கம் இரண்டையுமே குறிக்கும் திருக்கோவில், நாகர்கோவில் இரண்டும் கிழக்குக் கரையோரமுள்ள ஊர்கள் இங்கே முறையே சித்திர வேலாயுதர் கோவிலும், நாகதம்பிரான் கோவிலுமுண்டு. ஆயின் வல்லிபுரக் கோயிலென்பது வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தையே குறிக்கும்.

வல்லிபுரத்தில் எழுந்தருளியிருக்கும் திருமாலுக்கு ஆழ்வார் சுவாமியென்ற திருநாமமே பண்டு தொட்டுப் பரவணியாய் வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வாலயத்தின் பிரபாவம் தட்சிணகைலாசபுராணம் தட்சிணகைலாசமான்மியம் (வல்லிபுர வைபவம்) நகுலமலைக் குறவஞ்சி, திருக்கேதீஸ்வர புராணம் என்னும் நூல்களிற் பெரிதும் பேசப்பட்டுள்ளது இன்னும் சிங்கள மொழியிலுள்ள "கோகுலசந்தேச" என்னும் பிரபந்தம் வல்லிபுரம், புன்னாலை என்னும் இரு ஸ்தானங்களையும் பற்றி விஷேமாகக் குறிப்பிட்டிருப்பதும் சிறப்பம்சமாகும் "சுவர்ணாலயம் வல்லிபுரம் விஷ்ணோ ஷேத்திரத்துவயந்தா" எனப் போற்றுகிறது தட்சிண கைலாசமாண்மியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லிபுரம் - சிங்கை நகர்

கோகுலம், ஆயர்பாடி என்ற பொருளைத் தன்னகத்தே உடையது வல்லிபுரம். வல்லிபுரம் என்ற பெயர் தமிழகத்தோடு நெருங்கிய தொடர்புடையது. நடராஜப் பெருமானின் பஞ்ச சபைகளில் ஒன்று தாமிர சபை இவ்வாலயம் ராஜவல்லிபுரத்திலிருக்கிறது. இ..து சிவதலமானது போல பண்டை ராஜதானியாயிருந்த வல்லிபுரம் விஷ்ணு தலமாகும். தமிழ்ப் பெருங்குடிகளின் குடியேற்றம் ஈழத்துச்சரித்திரத்திலே ஓர் தனியத்தியாயமாகும் இன்று வல்லிபுரம் என்று அழைக்கப்படும் இடம் முன்னொரு போது வடமராட்சியில், தொண்டை மண்டலத்தில் இருந்து வந்து வல்லியதேவன் குடியேறிய பகுதியாகும் அவர்தான் பெயரை இட்டாரெனவும் கூறுவர் வரலாற்றாசிரியர்கள். கரிகாலன் தன் நாட்டைக் கோட்டங்களாகவும் பிரிவுகளாகவும் வகுத்தபோது வல்லிபுரம் என்பதும் அக்கோட்டங்களிலொன்றாயிருந்ததாக வரலாறுகள் கூறுகின்றன. தமிழ் நாட்டில் செங்கற்பட்டுக் கடலோரத்திலிருந்து 20மைல் தொலைவிலுள்ள ஒரு விஷ்ணு ஆலயம் வல்லிபுரம் என அழைக்கப்படுகின்றது. பூமாதேவி விஷ்ணுவைத் தரிசித்த இடம் (வல்லி புரம்) வல்லிபுரம் ஆகும் என்பதும் ஈழமண்டல சுதாசிரியர் முடிவு.

வல்லிபுரக் கோயிலைச் சூழவுள்ள மணற்பிரதேசம் ஒருகாலத்தில் மிக உன்னத நிலையில் இருந்த ஓர் இராசதானியென்பது ஆய்வாளர் பலருடைய கருத்தாகும். வல்லிபுரம் ஓர் துறைமுகமாக இருந்ததுமட்டுமல்ல தலைநகராயிருந்ததென்பதற்கான புதை பொருட் சின்னங்கள் கவனத்தக்குரியதாகும். கி.பி. எட்டாம் நூற்றாண்டில் கலிங்க அரசன் உக்கிர சிங்கன், கதிரமலையரசைக் கைப்பற்றி மாருதப்புரவீக வல்லியெனும் சோழ குமாரியை மணந்து பின்னர் கதிரமலையை விட்டு நீங்கி சிங்கை நகரை இராசதானியாக்கினான். பருத்தித்துறைக்கண்மையில் மணல்மேடுகள் உள்ள வல்லிபுரமே சிங்கைநகரமாகப் பண்டைக் காலத்தில் விளங்கியது எனக் குறிப்பிடுகிறார் குலசபாநாதன். சிங்கை நகரைப்பற்றிய சுவாமி ஞானப்பிரகாசரின் கருத்து வருமாறு:

வல்லிபுரம் மணற்கும்பிகளுள், காற்றுக் காலங்களிலகப்படும் பழம் பொருட்கள் அங்கு பலவிடங்களிற் குவிந்து கிடக்கும் பூர்வகாலக் கால்லோடுகள், கீச்சுக்கிட்டம் ஆகியனவும் அங்கிருந்து கரைமார்க்கமாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன பெருவீதியினடையாளங்களும் ஓர்நாள் விஸ்தார நகராய் விளங்கியதெனக் கரதலாஅமலகமாகக் காட்டும். அப்பால் ஆரியச்சக்கரவர்த்திகள் தம் செல்வாக்கு நிரம்பிய காலங்களில் பெருங் கப்பற்படையுடையோராய் பிரக்யாதி பெற்றுள்ளமையினால் அம் மரக்கலங்கள் ஆழியிற் சென்று சுலபமாய்த் திரும்புவதற்கு அனுகூலமான துறைமுகமுள்ளோராய் இருந்தமை அவசியம் கேகாலைப் பகுதியிலுள்ள கொக்கமத்திற் கண்டெடுத்த கல்வெட்டு மன்னோப் பொங்கொலிநீர்ச் சிங்கை நகர் ஆரியரெனச் சூசிப்பிக்கின்றது. பெருங்கடற் சமீபமும் சிறந்த துறைமுகப்பொலிவும் பொருந்தக் கொண்டதே வல்லிபுரம்! வல்லிபுரத்திற் கண்டெடுத்த முதுதாழிகள், செப்புக்காசுகள் என்பனவும் வல்லிபுரம் ஓர் புராதன தலைநகராயிருந்ததென்பதை நிருபிக்கின்றன.

1906ல் மணற்கும்பியிலோர் அழகான புத்தர் சிலையொன்று கண்டுபிடிக்கப்பட்டது. அது அமராவதி சிற்பமுறையிற் செய்யப்பட்டிருந்தது அக்காலத்தில் தேசாதிபதியாயிருந்த சேர். ஹென்றி பிளெக் இந்த அழகான புத்தர் சிலையை சீயதேச மன்னனுக்குப் பரிசாக அளித்தார். 1938ல் வல்லிபுரச்சாசனமான பொற்றகடொன்று எடுக்கப்பட்டது. இவ்வாறு வரலாற்றுச் சிறப்புக் கொண்ட வல்லிபுரம் இன்று ஈழத்தில் சிறந்த விஷ்ணு தலமாய்த் திகழ்கிறது.

## கோவிலமைப்பு

மூர்த்தி, தல, தீர்த்தமாகிய முப்பெருங்கீர்த்தியும் சீர்த்தியுமுள்ள இத்திருப்பதி இயற்கை வனப்புமிக்க அமைதியான புனித சூழ்நிலையிலே அமைந்திருக்கின்றது. வங்கக்கடல் ஓரம் விரிந்து பரந்து கிடக்கிறது வெண்மணற்பரப்பு. இடையிடையே செய்குன்றுங்கள் போல மணல்மேடுகள் நீண்டு படுத்துக்கிடக்கின்றன. இங்குமங்குமாய்ச் சுனைநீர்த் துரவுகள். இந்த நெய்தல் நிலம் மேற்கே செல்லச் செல்ல மருதநிலமாய் மாறி செந்நெற்கழனிகள் நிறைந்த பொன்கொழிக்கும் பூமியாகிறது. நெய்தலும், மருதமும் சங்கமமாகும் மென்புலத்தில் திருமால் கோயில் கொண்டிருக் கின்றான். இத்தலத்தின் பெருமையை வல்லிபுரமாயன் போற்றிவிருத்தம் இப்படிப் பேசுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெங்கடா சலமே றத்தி விலங்கலோ டழகர் கோயி**
**றாங்குபொன் னாலயஞ்சீர்த் தனிப்பெருமரங்கம் வெஃகா**
**வோங்குமு ரகம் வைகுண்ட மொளிரட்ட புயமேயாதிப்**
**பாங்குயர் தலம்போல் வாழும்பதி வல்லிரத்தாய் போற்றி,**

- போற்றிவிருந்தம் -

இந்து ஆலயங்களினடிப்படையிலே அமைந்த இக்கற்றளி வேதாகம முறைப்படி பூஜை நடக்கும் தேவஸ்தானமாகும். மூலக்கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், நிர்த்தமண்டபம், தம்பமண்டபம் என்பன முறையாயமைந்த கிழக்குச் சந்நிதியை உடையதெனினும் மேற்குவாயிலே பிரபல்யமானது. மூலக் கருவறையிலே மூலமூர்த்தி ஐம்பொன்னாற் செய்யப்பட்ட சக்கரமேயாகும். மேலே திரிதளவிமானத்தோடு காட்சியளிக்கிறது. மகாமண்டபம் தெற்கு நோக்கி சந்நிதானத்தில் ஸ்ரீமந்நாராயணன் ருக்மணி சத்தியபாமையுடன் காட்சியளிக்கின்றான். தென் வாசலில் மேலே ஸ்ரீரங்கநாதனின் அனந்த சயனக்காட்சியொன்று சிற்பிகளால் உருவாக்கப்பட்டிருக்கிறது வழமையான நந்திக்குரிய இடத்திலே பெரிய திருவடி (பெரியாழ்வார்) ஸ்தாபிக்கப்பட்டிருப்பது விஷ்ணு ஆலய ஆகம அமைப்பாகும். உட்பிரகாரம் வெளிப்பிரகாரம் ஆகிய இரு வீதிகளைக் கொண்ட இவ்வாலயத்தின் தெற்கு வெளிப்பிரகாரத்தில் ஆதி அனந்தாழ்வார் (நாகதம்பிரான்) கோவிலும், நாச்சியார் கோவிலும் உண்டு.

உட்பிரகாரத்தில் வடமேல் பாரிசத்தில் தும்பிக்கையாழ்வார் (வினாயகர்) சந்நிதானமும், அடுத்து நாகதம்பிரான் நச்சிதானமும் கிழக்குவாயிற் கோயிலாயமைந்துள்ளன. வடமேற்கே, வடக்கையண்டி, தெற்கு நோக்கிய வாயிலோடு திகழ்வது நாச்சிமார் சந்நிதியாகும். வழமையான இடங்களில் நவக்கிரகங்கட்கான கோயிலும், வசந்தமண்டபமும் அமைக்கப்பட்டிருக்கின்றது. உற்சவ காலங்களில் எழுந்தருளும் சுதர்சனம் (சக்கரம்) கருடாழ் மேலமைந்தபாணியில் காட்சி அளிக்கின்றது மற்றைய சைவ ஆலயங்களில் வைரவ மூர்த்தியுள்ள ஸ்தானத்தில் - இவ்வாலயத்தில் சிறிய திருவடியென அழைக்க சொல்லின் செல்வனான ஆஞ்சனேய சுவாமிக்கான சந்நிதி. மேற்கு வாயிலோடு திகழ்கின்ற காட்சி இவ்வாலயத்தின் சிறந்த அமைப்பாகும். கிழக்கு வெளிவாயிலிலே 71 அடி உயரமான ஏழடுக்கு இராச கோபுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்துள்ளது இவ்வாலயம் 1977 ம் ஆண்டில் மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. நல்ல தர்மகர்த்தா சபையினால் நிர்வாகிக்கப்பட்டும் வருகிறது.

## முத்தேசிகர்கள்

காரியகுரு. காரணகுரு. ஞானகுரு என முதன்மை ஆசாரியர் மூவருளர்.

காரியகுரு - நூல் நுட்பம் உணர்த்துபவர்

காரணகுரு - தீட்சையாதிய செய்பவர்

ஞானகுரு - பரத்தொடு உயிரைப் பதிப்பவர்

இம்மூவரும் மெஞ்ஞான குருநாதன் கல்லால் அடியில் கலந்திருப்பவர். செல்வம் தரும் திருச்சக்தியை மார்பில் வைத்தவர் திருமால். கல்வி உதவும் சரஸ்வதி சக்தியை நாவில் கொண்டவர் நான்முகன். ஆற்றல் அளிக்கும் மகேஸ்வரியை அறிவில் அமைத்தவர் உருத்திரா.

## பசுவின் குரல்

**உங்களுக்கு**
**சத்துணவான பால் , தயிர், நெய்**
**தந்து உங்கள்**
**பயிர்களுக்கு பசளையும்**
**தருகின்றேன்**
**என்னைக் கொல்லாதீர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாதேவ ஆசிரமமும் ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகளும்

- ப. கணேசப்பிள்ளை - ஜெயந்திநகர், கிளிநொச்சி-

**அம்மை அப்பருக்கு அன்பு செய்ய அருட்குருவாய் வந்து எமது**
**அம்மை இன்மை அல்லல் அகற்றி அருள் செய்திடுவர்**
**பொல்லாங்கவை தவிர்த்து பொன்னடிக் கீழ்ச் சேர்த்திடுவர்**
**எல்லோரும் இன்புற்றிருக்க அருள் செய்திடுவன்.**

இன்றைய உலகத்தைத் தனி நோக்கிலும் பொது நோக்கிலும் எந்தக் கோணத்தில் நின்று பார்த்தாலும் எங்கும் ஒரு குழப்பமான அமைதியற்ற சலனமான வாழ்வியலையே காணமுடிகிறது. மக்களிடம் காமம், கோபம், கடும்பற்று, பேராசை, அகங்காரம், சோம்போறித்தனம் என்ற கெட்ட பண்புகளில் ஏதாவதொன்றேனும் இருந்தே வருகிறது. இந்தப் பொய்யான சுரீரத்தின் மீதுள்ள பற்றுதலே இத்தீய குணங்கட்கெல்லாம் அடிப்படை.

பண்டைய ஆச்சிரம முறையில் ஆதிக்ஷேத்திரமாய்த் திகழ்வது கந்தர்மடம் வேதாந்த மடமாகும். இங்கே உருவான பரம்பரையிலே ஒருவர்தான் மகாதேவ சுவாமிகள். இவர்களிடம் கற்றுத் துறவு பூண்ட ஸ்ரீமத்வடிவேல் சுவாமிக்கு யோகர் சுவாமிகள் கொடுத்த அருட் கட்டளையின் அடிக்கல்லில் இருந்து கால்கோள் ஆன ஸ்தாபனமே மகாதேவ ஆச்சிரமம். உலகெலாம் சமயப் பணிசெய்யும் பிரசார சாதனமான ஆத்மஜோதியிலே இப்படியொரு கட்டுரை வருவது சிவன் செயல் மட்டுமல்ல சைவ சமயங்களின் பாக்கியமும் கூட. மகாமேகவனம், தண்டகாரணியம், சித்திர கூடம், பஞ்ச வடி, சித்தாச்சிரமம் இவைகளைப் பற்றிப் படித்தோமனால் நேரிலே ஆஸ்த்திரமத்தின் நிதர்சனமாய்த் திகழ்வது மகாதேவ ஆச்சிரமமே.

ஈழம் வாழ் சைவப்பெருங்குடி மக்களின் வாழ்வும், வனப்பும், பண்பும் பெரிதும் பேணப்பட வேண்டுமென உழைத்த உத்தம ஞானிகள் பலர், எமது தலைமுறையில் வாழ்ந்த யோகர் சுவாமிகள் அவர்களுள் ஒருவர். மேற்கத்திய நாகரீகத்தில் திளைத்து, அந்நியர்களுக்கு அடிபணிவதிலும் பார்க்க பயிர்த் தொழிலே நாட்டின் உயிர்த் தொழிலாயமைய வேண்டுமென யோகர் சுவாமிகள் பெரிதும் விரும்பினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மநேய ஒருமைப்பாட்டை உலகங்கெணும் பரப்புவதற்கு உறுதியான உள்ளமும் கலைஞானமும் பொருளாதாரக் கட்டுக்கோப்புமின்றியமையாதன. ஒரு வாக்கஞ்சிக்கேனும் பிறரிடம் கையேந்தாமல், சிறு தொழிலாயினுஞ் செய்து வாழ்வதே சிறந்த இலட்சிய வாழ்வாகும் என்பதை சாதனையில் கொண்டுவரப் பல தொண்டர்களை உருவாக்கினார் யோகர்சுவாமிகள். சுந்தரமான வாழ்வின் அடிநாதமாகச் சொந்தத் தொழிலும் பொருளாதார வளர்ச்சியும் அமைய வேண்டுமென்ற கோட்பாட்டை நிலைநிறுத்திய அருட்குரவர் அவர்.

அந்த ஆத்ம ஞானியின் திருவுள்ளத்தில் அரும்பிய சிந்தனைகளுள் ஓர் உருவமாக மிளிர்வது மகாதேவ ஆச்சிரமம். கிளிநொச்சியில் யாழ். கண்டி விதியிலுள்ள கரடிப்போக்குச் சந்தியிலிருந்து உருத்திரபுரம் செல்லும் பெருஞ்சாலையில் இருக்கும் ஏழாம் வாக்காலில் உள்ள சைவ மகா வித்தியாலயத்திற்கு மேற்கே, தெற்கு நோக்கிச்செல்லும் ஒழுங்கையில் (கப்பிறோட்டில்) ஜெயந்தி நகரின் சிவ சின்னமாக விளங்குவதுதான் மகாதேவ ஆச்சிரமம். இவ்வாச்சிரமம் பண்டைக்கால குருகுல வாசத்தையும், ஆன்மஞானிகளின் திவ்யாதரிசனத்தையும் அவர்களின் அருளுரைகளையும் நிதர்சனமாகக் கொண்டு மிளிர்கிறது. கட்டளையெதுவுமின்றி திருநெறிய தமிழை ஓதித், தெய்வீக நாட்டத்தையும், தவ வேட்டலையும் பரப்பும் ஒரு தவச்சாலையாக மிளிரிகிறது.

ஆச்சிரமத்தை நாடும் பல்வேறுபட்ட பக்தர்களுக்குப் பசிப்பிணிக்கு உணவும் மனப்பிணிக்கு குரு தரிசனமும் பிறவிப்பிணிக்கு அருளுரைகளையும் வாரி வழங்கி ஆதரிக்கும் அறநிலையமே மகாதேவ ஆச்சிரமமம். தவத்திரு வடிவேற் சுவாமிகள் ஒரு கர்ம வீரர் சோம்பலென்று நுடங்கிக்கிடவாமல் பணிசெய்பவர். பரிபூரணனுக்கே அடிமைத்திறம் பூண்ட திருவருட் செல்வர். ஊர் நடுவே பழுத்த நல்ல மரம்தான் அவர்கள். ஆச்சிரமத்தின் தலைமைப் பீடத்தை அலங்கரிக்குமவர்களின் வாக்கில் சாத்திரங்களும் தோத்திரங்களும் சரளமாகத் துள்ளுநடை போடும் பிரஸ்தானத்திரேயமென்ன, தத்துவக் கட்டளை, ஆத்மபுராணம், ஞான வசிட்டம் என்ன- ஏன் ஆதிசங்கரரின் அத்து விதத்துவமென்ன, அவர்களுக்குத் தெரியாதொன்றுமேயில்லை. சந்தேகம் தீர்த்து அருளுரை வழங்கும் திறமை அன்னாருக்கே உரித்தான தனிப்பண்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் கந்தர்மடத்திலிருக்கும் வேதாந்த மடத்து ஞானாசிரியர் மகாதேவ சுவாமிகளின் அருளணைப்பில் வளர்ந்து ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகளின் குருநாதனின் பெயரால் ஆச்சிரமத்தை அமைத்துத் தொண்டு செய்கின்றார்களென்றால் குருபக்தி எவ்வளவு மகத்தானது.

இணுவிலைத் தாயகமாகக் கொண்ட வடிவேல் சுவாமிகள் பரமானந்தவல்லி ஆச்சிரமத்தைப் பிறந்த மண்ணிலே அமைத்து தன் இளமைக் காலத்தைத் தொண்டிலே கழித்தார். அது மட்டுமன்றி பூமி வளம் காணும் சிறந்த கமக்காரராயும் வாழ்ந்தார். உடலுழைப்பிலும் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தபடியாற்றான் காடு வெட்டி, நிலம் திருத்தி களனி கண்டு பாலைவனமாய்க் கிடந்த ஜெயந்தி நகரிலே சோலைவனத்தை அமைத்தார். வெறும் வரண்ட உள்ளங்களைக் கூட நல்ல விளைநிலங்களாக்கி சைவப்பயிரும், தமிழ்ப்பயிரும் வளர்த்தார். வளர்த்துக் கொண்டே இருக்கிறார். பத்து அம்சத் திட்டங்களைத் தீட்டி அவற்றைக் கட்டளைகளாகக் கொண்டு அருள் தொண்டாற்றி வருகிறார்கள். பாடசாலைகளை அமைத்தல், புதிய ஆலயங்களை ஸ்தாபித்தல், பழையன வற்றைப் புனருத்தாரணஞ் செய்தல், திருமுறை வகுப்பும், பண்ணிசைப் படிப்பும், சிவதீட்சை வைத்தல், சமய போதனையும் பிரசாரமும், கூட்டு வழிபாடும் பஜனையும், தியான வாழ் வும் தத்துவ நூல்களைக் கற்பித்தலும், உலகெங்குமுள்ள பெரியோர்களை அழைத்து அவர்களின் அருள்வாக்கை மக்கள் பெற வைத்தலும், அனாதைச் சிறார்களின் உயர்மட்டக் கல்விவரை வழிப்படுத்தலும் போன்ற பெரிய காரியங்களையெல்லாம் நிறைவேற்று கிறார்கள் சுவாமிகள். ஆச்சிரமத்திலே குருபூர்ணிமா தினம், ஏகாதசி விழா, சிவராத்திரி விழா, குருநாதர் நினைவு விழா, ஆஸ்சிரம ஜெயந்தி விழா என்பன சிறப்பாகக் கொண்டாடப்பட்டு மகேஸ்வர பூசையும் தவறாமல் நடைபெற்று வருகிறது.

இவ்வாறு கிளிநொச்சியில் மட்டுமன்றி சுவாமிகள் மட்டக்களப்பு, நாவலப்பிட்டி, கொழும்பு போன்ற இடங்களுக்கெல்லாம் சென்று கதாகாலட்சேபமும் இலக்கியப் பேருரையும் சமயப் பிரச்சாரமும் செய்து கொண்டிருக்கிறார்கள் இத்தனைக்கும் அவர்களுடைய அசையாத குருபக்தியே காரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாச்சிரமம் 1952ம் ஆண்டு ஆவணியில் நிறுவப்பெற்றது. வெள்ளிவிழாவை எட்டிப் பிடிக்கும் காலகட்டத்தில் 75 ஆண்டைத் தாண்டிய வடிவேற் சுவாமிகளின் அயராத உழைப்பும், அசையாத நம்பிக்கையும் நம்மையெல்லாம் தட்டியெழுப்புகின்றதன்றோ. இத்தனைக்கும் முளங்காலளவு மேலே நிற்கும் காவியுடை, தோளிலேயோர் துவாய் ஆடைத் துண்டு, நீண்டு வளர்ந்த ஞானத்தாடி, நரையோடு பின்னிய குடும்பி, செக்கச் சிவந்த மேனியில் திருநீற்றினொளி, வாய் நிறைந்த சிரிப்பு, தளர் நடையோடு கூடிய எடுப்பான தோற்றம், அறிவுக்கோர் களஞ்சியமான முகக்களை, பாவம் நிறைந்த பார்வை இதுதான் சுவாமிகளின் தோற்றம் காட்சியிலே எளியவர், காரியத்திலே கெட்டி.

இவ்வாறு வண்ணத் தமிழும் சுவையும் போல், மகராயாழும் இசையும் போல, கன்னல் சுவையும் கருத்தும் போல ஆச்சிரமத்தோடு ஒன்றித்து நிற்கும் சுவாமிகளின் தொண்டும் வாழ்வும் இமயம் முதல் குமரி ஏன் அப்பாலே தெய்வந்துறை வரை ஒரு புதிய உலகத்தையே ஆக்கிக்கொண்டிருக்கும் ஆயிரமாயிரம் தபோதனர்க்கோர் எடுத்துக் காட்டாகும்.

## நீதி மொழிகள்

மனிதர்கள் புகழ்வதும் சீக்கிரம், இகழ்வதும் சீக்கிரம்.
ஆதலால் மற்றையோர் உன்னைப் பற்றிச் சொல்லும்
வார்த்தைகளைக் கவனியாதே.

பிறர் எதைச் செய்ய வேண்டுமென்று நினைக்கின்றாயோ
அதை நீயே செய்.

ஆலயத்தில் இறைவனைத் தொழுகிறோம். அத்தகைய
ஆலயங்கள் அனைத்திலும் சாலச் சிறந்தது "நம்சரீரம்".
உலகெங்கும் குடிகொண்டுள்ள இறைவன் நம்
உள்ளத்திலும் விசேடமாய் இருக்கிறார்.

'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்' என்றார்
சிவபக்தர் ஒருவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ விசுவாம்பா விசாலாட்சி மாதுஜி பாடும் பிறந்த கதை

முனிவர்களில் மிகவும் சிறந்தவர் பராசர முனிவர். இவருடைய புத்திரனின் பெயர் வியாசபகவான். வியாசபகவான் சிவபெருமானால் கூறப்பட்ட வேதங்களைத் தொகுத்தமையால் வேதவியாச முனிவர் என அழைக்கப்பட்டார்.

வேதவியாசர் ஆன்மாக்கள் உய்ய வேண்டிப் பதினென் புராணங்கள் பாடியவர். அதுபோல மாபெரும் இதிகாசமான பாரதமும் பாட விளைந்தார்.

முதலில் பாரதக்கதைகளை தன் மனதில் ஒழுங்காகத் தொகுத்து மனனம் செய்து கொண்டார். இதன் பின்னர் பிரம்மனை நினைத்து தவம் செய்தார். பிரம தேவர், வியாச பகவானுக்கு தரிசனம் அளித்தார்.

அப்போது வியாச பகவான் தலை வணங்கி கைகூப்பி, ஐயனே! அருமையான எல்லோருக்கும் பொருத்தமான நூலொன்று என் மனதில் உருவாகியுள்ளது. இதை எழுதக் கூடியவர் இந்த உலகத்தில் இன்று யாருமே இல்லை என்று கூறினார்.

பிரமதேவன் வியாசரைப் புகழ்ந்தார். பின்னர், முனிவரே! உம்முடைய நூலை எழுதக் கூடியவர் விநாயகப் பெருமானால் மட்டும் முடியும். அதனால் விநாயகப் பெருமானைத் தியானித்து தவம் செய்வாய். விநாயகப்பெருமான் காட்சி தருவார். அவரை வேண்டுதல் செய்தால் எழுதி முடிப்பார் என்று கூறினார்.

வியாசர் விக்கினேசுவரரைத் தியானம் செய்து பூசை செய்தார். இதனால் விநாயகப் பெருமான் வியாசருக்குத் தரிசனம் கொடுத்தார். வியாசர் தன் எண்ணத்தை விநாயகப் பெருமானுக்குப் பயபக்தியுடனும் பணிவன்புடனும் விண்ணப்பம் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கணநாதரே! பாரதக் கதைகளை நான் சொல்லச் சொல்ல நீங்கள் எழுத வேண்டும். இதுவே என் பிரார்த்தனையாகும்" என்றார். "அப்படியே ஆகட்டும் ஆனால் ஒரு நிபந்தனை நான் எழுதத் தொடங்கினால் எழுதுகோல் இடையில் நிற்காது. அதனால் இடைநிறுத்தாது சொல்லிக் கொண்டே போக வேண்டும்மெனக்" கணநாதர் நிபந்தனை விதித்தார். இந்தக் கடுமையான நிபந்தனையை வியாசர் ஒப்புக்கொண்டார். "சுவாமி! தாங்கள் எழுதும் போது பொருளை உணர்ந்து கொண்டே எழுதிக் கொண்டு போக வேண்டும்." என்று எதிர் நிபந்தனை ஒன்றை வியாசர் தந்திரமாகக் கூறினார்.

விநாயகப் பெருமான் புன்னகை பூத்தார். பின்னர் தன் இரு கொம்புகளில் ஒன்றை முறித்து மேருமலைச் சாரலில் எழுத வியாசர் பாரதம் பாடியதாக வரலாறு கூறுகின்றது.

வியாசர் காலம் வேதகாலமாகும். வேதகாலத்தில் இன்று போல அச்சகங்களில்லை. பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், நூல்கள், எழுது கருவிகள் பெருந்தொகையான ஆசிரியர்கள் கிடையாது.

குரு கற்பிக்கின்ற வித்தைகளை அப்படியே மனதில் பதிப்பது அக்கால சீடர்களின் திறமையால், ஞாபக சக்தியே நூல்களாக, நூல்களின் ஆலயமாக விளங்கியது.

வியாச பகவானின் பிரார்த்தனையால் விநாயகப் பெருமான் முதன் முதலாக பாரதத்தை எழுதி முடித்தார்.

பாரதம் அழியாதிருக்க வியாச பகவான் முதன்முதலாக தனது மகனான சுகருக்குக் கூறினார். சுகமுனிவர் பல சிஷ்யர்களுக்குக் கூறினார். இவ்வாறு பாரதம் கூறப்பட்டுப் பின்னர் அச்சு வடிவில் உருவாகியது. வேதத்தில் எழுதப்பட்ட பாரதத்தை விஷ்ணு பக்தரான வில்லிபுத்தூர் ஆழ்வார் தமிழில் பாடினார் என்பர்.

பாரதக்கதை மக்களிடையே பரவவியாசர் மூலகாரணமாக இருந்தபோதிலும் விநாயகப் பெருமானின் திருவருளே பேருதவியாக இருந்தது என்பதைக் கதையின் ஆரம்பத்திலேயே காண முடிகின்றது. பரந்து விரிந்து மிகவும் ஆழமான அற்புதப் பாரதக் கதைகளை தேவர்கள் முனிவர்களாலே எழுதமுடியாது. அதனை எழுதித் தந்தவர் விநாயகப் பெருமான். விநாயகப் பெருமானை முதல் முதல் குட்டி வணங்கினால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் சகல கலைகளையும் எளிதில் விளக்க வைப்பார். விநாயகப் பெருமானால் எழுதப்பட்ட பாரதக் கதைகளைச் சிறுவர்களும் பெரியவர்களும் பக்தியுடன் படித்து, அதன்படி நடக்க விநாயப் பெருமானை முதலில் வேண்டுதல் செய்வோம்.

(தொடரும்)

## வாக்குண்டாம் - ஔவையார்

### காப்பு

**வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்**
**நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு**
**துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்**
**தப்பாமற் சார்வார் தமக்கு.**

பவளம் போலுஞ் சிவந்த திருவுருவுடையவரும், தும்பிக்கையருமாகிய விநாயகக் கடவுளின் திருவடிகளைத் தவறாது வழிபடுபவர்களுக்கு நல்ல சொல்வன்மை ஏற்படும், நல்லெண்ணங்கள் தோன்றும், அவர்களின் உடல்கள் என்றும் வாடுதலையடையா (விநாயகர் - காற்று)

**1.** *நன்றிக்கு நாள் இல்லை*

**நன்றி யொருவற்குச் செய்தக்கா லந்நன்றி**
**என்று தருங்கொல் எனவேண்டா - நின்று**
**தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்**
**தலையாலே தான்தருத லால்.**

சோர்வின்றி நிலையாய் வளர்கின்ற தென்னையானது தன் வேர்கள் உண்ட நீரினை ஒரு காலத்திலே தன் தலையிற் சுமந்து இளநீராய் மக்களுக்குத் தருகின்றது. அதுபோல ஒருவருக்கு நாம் செய்யும் நன்றியின் பயன் எப்போது கிட்டும் என்று ஐயுற வேண்டியதில்லை. என்றோ ஒருநாள் அது நம்மை வந்தடையும்.

**2.** *நீர்மேல் எழுத்தும் கல்லில் எழுத்தும்*

**நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரங்**
**கல்லில் எழுத்துப் போல் காணுமே - அல்லாத**
**ஈரமில்லா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்**
**நீர்மேல் எழுத்துக்கு நேர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லவரான ஒருவருக்கு நாம் செய்த உதவி, அவர் நெஞ்சத்திலே கல்லின் மீது பொறிக்கப்பட்ட எழுத்தாக நின்று நிலவும் நல்லவரல்லாத கொடியவருக்கு நாம் செய்கின்ற உபகாரம் நீரில் எழுதிய எழுத்தாக அவரால் உடன் மறக்கப்பட்டுவிடும்.

### 3. *இளமையில் வறுமை இன்னலுக்கு ஏது*

**இன்னா இளமை வறுமைவந் தெய்தியக்கால்**
**இன்னா அளவி லினியவும் - இன்னாத**
**நாளில்லா நாள்பூத்த நன்மலரும் போலுமே**
**ஆளில்லா மங்கைக் கழகு.**

பருவமில்லாத பருவத்திலே மலர்ந்த நல்ல மலரைப் போலவும், கணவனில்லாத பெண்ணிற்கு அழகைப்போலவும், முறையே இளமைக் காலத்து வறுமையும், முதிய காலத்தின்பப் பொருள்களும் துன்பத்தையே தரும்.

### 4. *மேன்மக்கள் என்றும் மேன்மக்களே*

**அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவளாய்**
**நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்**
**கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு**
**சுட்டாலும் வெண்மை தரும்.**

நன்கு காய்ச்சினும் பால் சுவையிலே குறையாது. அதுபோல நன்கு கலந்துறவாடிப் பழகினாலும் நட்பிற்குரியரல்லாதார் நண்பராக மாட்டார். சங்கை எத்துணைச் சுட்டாலும் அதன் வெண்மை மாறாது அதுபோல உயர்குடி மக்கள் வறியவரான காலத்தும் தம் நிலையினின்றும் இறங்கமாட்டார்.

### 5. *ஆங்காலமே எவையும் ஆகும்*

**அடுத்து முயன்றாலும் ஆகுநா ளன்றி**
**எடுத்த கருமங்கள் ஆகா - தொடுத்த**
**உருவத்தால் நீண்ட உயர்மரங்க ளெல்லாம்**
**பருவத்தால் அன்றிப் பழா.**

வடிவத்தால் உயர்ந்து வளர்ந்த மரங்களும் தமக்குரிய பருவ காலத்திலன்றிக் கனிகளைத் தரமாட்டா, இது போலவே எவ்வளவு. முயன்றாலும் அவை நிறைவேறுங் காலத்தன்றி எக் கருமங்களும் நிறைவேறமாட்டா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. *மானம் நீங்கின் வாழா மாந்தர்*

**உற்ற இடத்தி லுயிர்வழங்குந் தன்மையோர்**
**பற்றலரைக் கண்டால் பணிவாரோ? கற்றூண்**
**பிளந்திறுவ தல்லாற் பெரும்பாரந் தாங்கின்**
**தளர்ந்து வளையுமோ தான்.**

கல்லாலமைந்த தூணானது பெரிய பாரத்தை சுமக்க நேர்ந்தால் தளர்ச்சியடைந்து வளைந்து கொடாது. பிளந்து முறிந்து வீழும். அதுபோன்று தமக்கு அவமானம் நேருமானால் உயிரையே கொடுக்கும் மான வீரர் பகைவரை எதிர்க்க நேர்ந்தால் அவருக்குப் பணிந்து போவார்களோ? போகார்.

7. *அறிவு, திரு, பண்பு*

**நீரளவே யாகுமாம் நீராம்பல் தான்பெற்ற**
**நூலளவே யாகுமாம் நுண்ணறிவு - மேலைத்**
**தவத்தளவே யாகுமாந் தான்பெற்ற செல்வம்**
**குலத்தளவே யாகுங் குணம்.**

தண்ணீர் உயரும் அளவிற்கேற்பவே அல்லியும் வளரும். ஒருவனின் கல்வியின் உயர்வு அவன் கற்கின்ற நூல்களின் அளவிற்கேற்பவே அமையும். ஒருவன் பெறுஞ் செல்வம் அவன் முன்பு செய்த தவத்தின் அளவாகவே அமையும். பிறந்த குலத்திற்கேற்பவே பண்பு விளங்கும்.

8. *நல்லாரைக் காண்பதுவும் நன்று*

**நல்லாரைக் காண்பதுவும் நன்றே. நலமிக்க**
**நல்லார் சொற்கேட்பதுவும் நன்றே நல்லார்**
**குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு**
**இணங்கி இருப்பதுவும் நன்று.**

நல்ல குணமுடையாரைக் காண்பதுவும் நல்லது. நன்மை மிகுந்த உத்தமரின் அறிவுரைகளைக் கேட்பதுவும் நல்லது. நல்லவரது குணங்களை உரைப்பதுவும் நல்லது அவரோடு நட்பாகக் கூடி வாழ்வதும் நல்லது.

* * * * * * * * * * * * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தப் பெருமான் கருணை வெள்ளம்

## - தவத்திரு சுந்தர சுவாமிகள் -

சிவபெருமானுக்குப் பத்துக் கைகள், ஐந்து திருமுகங்கள். சிவபெருமான் மேல் நோக்கிய முகமாகிய ஈசானம், கிழக்கு முகமாகிய தற்புருஷம், தெற்கு முகமாகிய அகோரம், வடக்கு நோக்கிய முகமாகிய வாமதேவம், மேற்கு நோக்கிய சத்யோசாதம் என்னும் ஐந்து முகங்களால் கருணை செய்கிறார். கந்தப்பெருமான் சிவபெருமானுக்குள்ள ஐந்து முகத்தோடு கீழ் நோக்கிய அதோ முகமும் சேர்ந்து ஆறு முகத்திலும் கருணை பொழிகிறார். கந்தபுராண ஆசிரியர் கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள் "அறிஞர் ஆனோர் சிந்திக்கும் தமது தொல்லைத் திருமுருகம் ஆறும் கொண்டான்" என்பர். "திகழ்தசக்கரச் செம்முகம் ஐந்துளான்" என்று தொடக்கப் பாடலில் கூறி முருகன் திருஉருக் கொண்டமை கூறும் இடத்து "கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே ஒரு திருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய" என்பார். குமரகுருபர சுவாமிகள் "கருணைத் திருஉருவாய்க் காசினிக்கே தோன்றிக் குருபரன் என்று ஓர் திருப்பேர் கொண்டு" என்று குறிப்பிடுகின்றார்.

சிவபெருமானிடம் தேவர்கள் முறையிடக் கருணையினால் சிவபெருமான் நெற்றிக்கண்ணிலிருந்து தோன்றியவர் கந்தப்பெருமான். சிவப்பரஞ்சுடரின் ஆறு நெற்றிக்கண்ணிலே இருந்து தோன்றிய ஆறு நெருப்புப் பொறிகளும் ஆகாயம் எங்கும் பரக்கத் தேவர்கள் அஞ்சினர். அந்நெருப்புப் பொறிகளை காற்றுக் கடவுளிடம் தந்தனர் காற்றும் ஆற்றொனாது நெருப்புக்கடவுளிடம் கொடுக்க நெருப்புக் கடவுள் தண்ணீராகிய கங்கையிடம் தர கங்கை தாங்காமாட்டாமல் சரவணக்காட்டிலே வைக்க அங்கு ஆறு குழந்தைகளாகத் திருவுருக்கொண்டு சரவணத்தடாகத்திலே தாமரைத் தவசில் கார்த்திகைப் பெண்கள் பாலூட்டித் தாலாட்டி வளர்த்தனர்.

சிவபெருமான் உமாதேவியாரோடு சரவணத்தடாகத்திற்குச் செல்ல உமாதேவியார் ஆறு குழந்தையையும் ஒன்றாக ஆர்வத்தால் எடுக்க ஆறுமுகமும் பன்னிரண்டு தோளும் இரண்டு திருவடியுமாக விளங்கினார் முருகப்பெருமான். ஒன்றாகச் சேர்ந்த அந்த முருகக் குழந்தைக்கு 'கந்தன்' என்று பெயர்சூட்டினார் உமாதேவியார். எந்த உலகத்தும் தாயார் பெற்றெடுத்த குழந்தைக்கு தந்தை பெயர் வைப்பது வழக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகக்குழந்தையைச் சிவபெருமான் நெற்றிக்கண்ணிலே இருந்து தந்தார். தாயாராகிய பார்வதிதேவியார் கந்தன் என்று பெயர் வைத்தார்கள். அந்தக் கந்தன் பெயரே முருகனுடைய பல்லாயிரம் நாமங்களில் உமாதேவியார் வைத்த நாமம் ஆகையால் முருகன் வரலாற்று நூலுக்கு ஆசிரியர் 'கந்தபுராணம்' என்றே வைத்தார். முருகன் அடியார்களில் சிறந்தவராகிய அருணகிரிநாதரும் கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி, கந்தா அந்தாதி என்றே அமைத்தார். குமரகுருபர சுவாமிகளும் 'கந்தர் கலிவெண்பா' என்றே பாடியருளினார். கருணைகூர் முகங்கள் ஆறும் கொண்ட கந்தப்பெருமானைக் கருணைக்கடல் என்று கந்தர் அலங்காரம் முதல் பாடலில் அருணகிரிநாதர் குறிப்பிடுகின்றார். அன்பர்களுடைய மல மாசாகிய பிரபஞ்சச் சேற்றைக் கழுவச் சிவபெருமான் கங்கை ஆற்றைச் சூடியுள்ளார். அவருடைய திருக்குமாரராகிய கந்தப்பெருமான் கருணைக் கடலாக விளங்குகிறார்.

"பேற்றைத்தவம் சற்றும் இல்லாத என்னைப் பிரபஞ்சம் என்னும் - சேற்றை கழிய வழிவிட்டவா செஞ்சடாடவிமேல் - ஆற்றைப் பணியை இதழியைத் தும்பையை அம்புலியின் கீற்றைப் புனைந்த பெருமான் குமாரன் கிருபாகரனே - கிருபாகரன் என்றால் கருணைக்கடல் என்று பொருள். கந்தப்பெருமான் தாரகன், சிங்கமுகன், சூரபதுமன் ஆகிய மூவரையும் சம்மாரம் செய்தது கருணையினால்தான். சூரபதுமனுடன் ஆறுநாள் கந்தப்பெருமான் போர் தொடுத்தார். சூரபதுமனுக்கு தன்னுடைய திருப்பெரு வடிவமாகிய விசுவருபத்தைக் காட்டினார். சூரபதுமன் அவ்வடிவைக் கண்டு வியந்தான். 'அண்ணலார் குமரன் மேனி அடிமுதல் முடியின் காறும் எண்ணிலா ஊழிக்காலம் எத்திறம் நோக்கினாலும் கண்ணினால் அடங்காது உன்னில் கருத்தினால் அடங்காது' என்று உருகினான். கந்தப்பெருமான் திருவடி அழகைப் பார்த்து 'ஆயிரங் கோடிகாமர் அழகெல்லாம் திரண்டு ஒன்றாகிமேயின எனினும் செவ்வேள் விமலமாம் சரணந்தன்னில் தூயநல் எழிலுக்காற்றாது' என்று நினைந்தான். நான் தேவர்களைச் சிறைவைத்தது தவறு என்று பலரும் கூறினார். அதனாலன்றோ முருகப்பெருமானைக் காணும் பேறு பெற்றேன் நான் செய்த தவப்பயன் 1008 அண்டங்களை ஆட்சி செய்வது அல்ல. முருகனைக் கண்டால்தான் என்று எண்ணினான் 'ஏதுமில் அமரர் தம்மையான் சிறை செய்தது எல்லாம் தீதென உரைத்தார் பல்லோர் அன்னதன் இயற்கையாலே வேதமும் அயனும் ஏனை விண்ணவர் பலரும் காணநாதனிங்கனையப் பெற்றேன் நற்றவப்பயன் ஈதன்றே' என்றான். கால்கள் கந்தப்பெருமானைச் சூழுதல் வேண்டும். கைகள் தொழுதிடல் வேண்டும். சென்னி வணங்குதல் வேண்டும். நான் இவற்றிற்கு ஆளாகி வாழுதல் வேண்டும். ஆனால் சூரன் தன் மனம்விட்டு எதிரியை வணங்கினார் என்றால் தன் பெருமை என்னாவது. 'தடுத்தது மானம் ஒன்றே' என்று நின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப்பெருமான் கோவில் வரலாறு

**- தேவஸ்தானத்தார் -**

விஷ்ணுவை முழுமுதற் பொருளாகக் கொண்டு வணங்கும் சமயம் வைணவம் என்று அழைக்கப்படும் வைணவத்தின் நாதன் நாராயணன் என்று போற்றப்படுகின்றான். விஷ்ணுவைப் போற்றி வழிபடுபவரை வைணவர் என்று அழைப்பர். படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழிலில் காத்தல் தொழிலை ஏற்று உலகத்தைக் காத்து இரட்சிப்பவன் திருமால் ஆவன். பழந்தமிழ் இலக்கியங்களும் மாயோன் வழிபாட்டை எடுத்தியம்புகின்றன. பண்டுதொட்டுத் தமிழ் மக்கள் திருமால் வழிபாட்டையும், சிவ வழிபாட்டையும் இரு கண்களெனப் போற்றி வளர்த்து வருகின்றனர். தமிழ்நாடு எங்கணும் சிவத்தலங்களுக்கு ஒப்பான விஷ்ணு தலங்கள் பலவுள்ளன.

தமிழும், சைவமும் தழைத்தோங்கும் ஈழவழநாட்டின் கண் வைணவத் தலங்கள் பலவுள்ளன. இவற்றில் ஈழத்திருப்பதியென வழங்கப்பெறும் ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானமும் ஒன்றாகும். இவ்வாலயம் யாழ்நகரில் வண்ணையம்பதியில் அமைந்துள்ளது. இத்தலம் பண்டுதொட்டு நவக்கிரக வழிபாட்டிற்குப் பிரசித்தி பெற்று விளங்குகின்றது.

## ஆலய வரலாறு

கி.பி. 1347ல் செகராசசேகரன் என்னும் பட்டத்துடன் முடிசூடப்பெற்ற குணபூசண சிங்கை ஆரியன் நெசவுத்தொழிலை விருத்தி செய்யும் பொருட்டு இத்தேவஸ்தானத்தின் பரிபாலகரின் மூதாதையராகிய நுண்ணிய கைத்திறமை வாய்ந்த காருக வினையாளரான பத்மசாலிச்செட்டிப் பிள்ளைகளை ஆந்திர நாட்டினின்றும், காஞ்சியினின்றும் அழைப்பித்து இவர்கள் வதிவதற்க்கு வன்னயம்பதியில் இடமும் அளித்தனன். இவரில் பெரும்பாலானோர் வைணவர்களாயிருந்தமையினால் தம் வழிபாட்டிற்காக இத்திருக்கோவிலை ஸ்தாபித்து, பரிபாலித்து வருகின்றனர். இக்கோவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள நிலம் "அடியார்க்கு நல்லான் வரம்பு" என உறுதிச்சாசனம் சான்று பகர்கின்றது. இக்கோவிலின் தலவிருட்சம் பலாமரமாகும். இவ்வாலயத்தை உருவாக்க முன்பு இச்சாகியத்தைச் சேர்ந்த பெரியார் ஒருவர் இவ்விருட்சத்தின் அடியில் தாம்பரத்தினால் செய்யப்பட்ட ஸ்ரீதேவி, பூமிதேவி சமேதரான ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் விக்கிரகத்தை வைத்து ஆராதித்தனர் என்றும், இதன் பின்பே இவ்வாலயம் இச்சாகியத்தினரால் நிர்மாணிக்கப்பெற்றது என்று ஐதிகம் சான்று புகல்கின்றது. இப்பழமையான சிறிய விக்கிரகத்திற்கு ஏகாதசி தினங்களிலும், கொடியேற்ற உற்சவம், தீர்த்தோற்சவ தினங்களிலும் விழாக்கள் எடுக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய அமைப்பு

இத்தேவஸ்தானத்தின் முன் வாயிலில் ஏழு மாடங்களைக் கொண்ட நீண்டுயர்ந்த இராஜகோபுரமும் இதன் இரு புறத்தேயும் மணிக்கோபுரங்களும் நிர்மாணிக்கப்பெற்றுள்ளன. இந்த இராஜ கோபுத்தில் இடம்பெறும் சுதைவிக்கிரகங்கள் திருமாலின் தச அவதாரத்தையும், ஸ்ரீ இராமாயண, ஸ்ரீமந்பாகவத புராணங்களின் சில பகுதிகளையும் நினைவூட்டுகின்றன.

இவ்வாலயத்தின் கர்ப்பக்கிரகத்தில் ஸ்ரீ வேங்கடேஸ்வர மூர்த்தி எழுந்தருளியுள்ளார். இவரின் பின்புறத்தே சாயாவிக்கிரக ஸ்ரீதேவி, பூமிதேவி சமோதரரான ஸ்ரீவரதராஜப்பெருமாள் எழுந்தருளியுள்ளார். இவர்கள் இருவரும் மூலமூர்த்திகள் ஆவர். இதனையடுத்த அர்த்த மண்டபத்தில் ஸ்ரீ இரங்கநாத சுவாமி ஆதிசேஷசயனராய் உந்திக்கமலத்தில் ஸ்ரீ பிரம்மனை ஏந்திய வண்ணம் ஸ்ரீதேவி, பூமிதேவி சமேதராக தென்திசை நோக்கிய வண்ணம் எழுந்தருளியுள்ளார். இவரின் முன் புறத்தே ஆதி வேங்கடேஸ்வரமூர்த்தியும், உற்சவ மூர்த்தியான ஸ்ரீ வரதராஜப் பெருமாளும் அம்மாள்மாருடன் வீற்றிருக்கின்றனர். இம்மண்டபத்தின் ஈசான மூலையில் விஸ்வச்சேன மூர்த்தியும் எழுந்தருளியுள்ளார்.

இதனை அடுத்துவரும் மகாமண்டபத்தின் தென் பாகத்தில் ஸ்ரீ விக்கினேஸ்வரப் பெருமானும் வடபாகத்தில் ஸ்ரீ இராமமானுஜ ஆச்சாரியாரும் கோவில் கொண்டுள்ளனர்.

# இமய ஜோதியின் திவ்விய ஜீவன சங்கம்

-பண்டிதை செல்வி. சி. இராசலக்குமி

பேரானந்தப் பெருவாழ்வைத் தரும் இந்துமதம் பெருமைமிக்கது; அனாதியானது. இந்துமதத்தின் சிறந்த பண்பாடுகளையும், தத்துவங்களையும் அறிஞர்களும் அனுபூதி மான்களும் போதனையாலும் சாதனையாலும் போற்றிப் பாதுகாத்து வருகின்றனர். அவர்கள் தந்த நிறுவனங்கள் அருட்பணிகளை ஆர்வமுடன் ஆற்றி, மக்களின் ஆன்ம ஈடேற்றத்திற்கு ஆக்கம் தருகின்றன. இருபதாம் நூற்றாண்டில் லௌகீக ஆசைகளை தோற்றுவித்த அமைதியின்மை, சகிப்பின்மை, சண்டை, சமயக்கொள்கையில் மோதல் ஆகியவை மக்கள் உள்ளத்தில் ஆத்மீக தாகத்தைத் தூண்டிவிட்டன என்பது மிகையாகாது. இந்நிலையில் மக்களின் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு, இல்லம் தோறும் ஆன்மீக நாட்டமுள்ள,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வீக வாழ்க்கை தேவைப்பட்டது. ஒவ்வொருவரும் மற்றவர்களின் மதத்தையும் மதிப்பவர்களாய், சர்வசமரசம், சகோதரத்துவம், அன்பு, தியாகம், நல்லெண்ணம், பரஸ்பர நல்லிணக்கம் என்பவற்றோடு கூடிய நல்லதோர் சூழ்நிலையில் வாழ வேண்டும் ஒவ்வொருவரும் தத்தம் மதத்தை உறுதியோடும், மன ஒருமைப்பாட்டோடும் பின்பற்றிய, தெய்வீக வாழ்க்கை வாழ வேண்டும். ஆன்மீகக் கொள்கைகளை அனுவபபூர்வமாக அப்பியசிக்கும் - யோகம், தினசரி வாழ்க்கையில் அமைதல் வேண்டும். இத்தகைய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்ததே திவ்விய ஜீவன சங்கம்.

புனிதத்தில், தோற்றதத்தில் உலகில் உயர்ந்த இமயமலை இறையொளி வீசும் இன்பமலை. அங்கு கங்கா தேவியின் அரவணைப்பில் விளங்குவது இருஷிகேசம். அனுபூதிமான்களின் ஆன்மீக அலைவீசும் இருஷிகேசத்திற்கு, மணிமுடியாகத் திகழ்ந்து சிறப்பைத் தருவது சிவானந்தநகர். அதனை அமைத்தவர் அகிலம் அனைத்தும் போற்றும் சுவாமி சிவானந்த மகராஜ் அவர்கள். 1887ம் ஆண்டு செப்டம்பர் 8ந் தேதி சுவாமி சிவானந்தர் தமிழ் நாட்டிற் பத்தமடையிற் பிறக்கும் போதே கருவில் திருவாகி தோன்றிய தெய்வீக சிந்தனை, தந்தையாரின் ஆதரவில் எட்டயபுரத்தில் வளர்ந்து, திருச்சியில் உயர்கல்வி கற்கும் போது, செழித்து, தஞ்சையில் வைத்தியக் கல்லூரியில் வாசித்தபோது தழைத்து, மலேயாவில் டாக்டராயிருந்த போது மலர்ந்து, வடநாட்டில் சாதனை செய்யுங் காலத்து காய்த்து, இருஷி கேசத்தில் பழுத்து பரவிய விதையே, திவ்ய ஜீவன சங்கம்.

அச்சங்கம் யோக வேதாந்தச் சோலையாக நிழல் தந்து, கர்மயோகம், பக்தியோகம், ஞானயோக கனிகளை அன்புடன் கொடுக்கின்றது. சேவை செய்யுங்கள், அன்பு செலுத்துங்கள், தியானம் பயிலுங்கள், அனுபூதியடையுங்கள், நல்லவராய் வாழுங்கள், நன்மையே செய்யுங்கள் என்று அறிவுரைகளைப் புகட்டுகின்றது. ஸத்சங்கம், நாமசங்கீர்த்தனம், ஜெபம், தியானம், லிகித ஜெபம், சம்பூர்ணயோகம் ஆகிய சாதனைகளைப் பயிற்றுகின்றது. திவ்ய ஜீவன சங்க அன்பர்கள் சமயப்பெரியோர்களின் குருபூசை, சிவராத்திரி, நவராத்திரி, திருவாதிரை முதலிய சமய விழாக்களைக் கொண்டாடுகின்றனர். மன ஒருமைப்பாடு பெறுவதற்கு அந்தர்யோக சாதனை செய்கின்றனர். உலக சேமத்திற்காக விசேஷ பிராத்தினை செய்கின்றனர். குருபூர்ணிமா தினத்தில் வெகு சிறப்பாகக் குருவழிபாடு செய்கின்றனர். 1936ம் ஆண்டு சிவானந்தரால் ஆரம்பித்த திவ்ய ஜீவன சங்கத்தின் வெள்ளிவிழாவை 1960ல் பாரததேசத்து அன்பர்கள், மேலைநாட்டு அன்பர்கள், ஈழத்து அன்பர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து சிறப்பாகக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

இராமகிருஷ்ணர் இயற்றிய ஞானதீபத்தை எல்லாத் திசையிலும் பிரகாசிக்கவைத்தவர் சுவாமி விவேகானந்தர். அவர் கீழைத்தேசத்தில் மட்டுமல்ல மேலைத் தேசத்திலும் மக்களுக்கு இந்துமதத்தின் பெருமையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்த்தினார். அதனால் மேல் நாட்டார் பலர் ஆசியாவை நாடி வந்து ஆத்மஞானத்தை ஆர்வமுடன் தேடினர் தேடுகின்றனர். ஆத்மஞானம் தேடி வந்தவர்களை அன்புடன் வரவேற்ற சுவாமி சிவானந்தரின் ஆசியும், அன்பும் பெற்று இன்புற்று வாழ்வோர் மேல்நாட்டில் பலர். அவர்கள் ஒன்று சேர்ந்து பணியாற்றும் திவ்ய ஜீவன சங்கமும் பல. சுவாமி சிவானந்தர் அமைத்த சமயநெறியை மேல்நாட்டு அன்பர்கள் பாராட்டி உள்ளனர். திவ்ய ஜீவன சங்கத்தின் வெள்ளிவிழாக் கண்டு இன்புற்று உள்ளங்களில் உதித்த உணர்வூற்றிற் சிலவற்றைத் தருகின்றோம்.

"தெய்வநெறிக்கழகம் அதன் சரித்திரத்தில் அரியதோர் கட்டத்தை தாண்டிச் சென்று கொண்டு இருக்கிறது. பொதுவாக அகில உலகிற்கும், விசேஷமாக இந்தியாவிற்கும் தனது 25 வருட சேவையை முடித்துக் கொண்டுள்ளது. ஸ்ரீ சுவாமி சிவானந்தரால் தொடக்கப்பட்ட இந்தச் சங்கம் அவருடையவும், அவர் சீடர்களுடையவும் அரும்பணியால் அகில உலக ஸ்தாபனமாக வளர்ச்சியடைந்துள்ளது. இதன் காரணம் ஆத்மீக அறிவுப் பிரசாரமெனும் அதன் நோக்கத்தில்தான் அமைந்துள்ளது. ஸ்ரீ சுவாமி சிவானந்தர் எல்லா நாட்டிலும் உள்ள மக்கள் வாழ்க்கையின் லட்சியத்தைக் குறித்தும் அதற்கான பாதைகள் குறித்தும் தெரிந்துகொள்ள வழி வகுத்துள்ளார். பொதுமக்களுக்கு ஆத்மீக அறிவைப் பரப்புவதெனும் ஸ்தாபகத் தவைலரின் நோக்கத்தின் பிரகாரம் ஆத்மீக மறுமலர்ச்சி இயக்கத்தில் கழகம் ஒரு பெரும் அமைப்பாக ஆகியுள்ளது'.

தெய்வ நெறிக் கழகத்தின் தெய்வீகப்பணி அகில உலகிலும் ஆத்மஜோதியைப் பிரகாரகிச்சச் செய்கின்றது. குருதேவர் அருளிச் செய்த நூல்கள் பல அவர்தம் அருளுரைகளை ஆங்கிலத்திலும், தமிழிலும் அன்பர்கள் பெற்றுப் பயன் பெறுகின்றனர். ஆத்மீகக் கருத்துகளைத் துண்டுப்பிரசுரங்கள், எல்லாத்திசைகளிலும் பரப்பி நிற்கின்றன. குருதேவரின் ஞானக்குழந்தைகள், உலகம் எங்கும் சென்று தெய்வீக வாழ்க்கைக்கு வழிகாட்டியாக விளங்குகின்றனர். ஆங்காங்கே சங்கங்கள் அமைத்தும் ஆசிரமங்கள் அமைத்தும் அரும்பணியாற்றுகின்றனர்.

சுவாமி சிவானந்த மகராஜ் அவர்கள் 1950 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அகில இந்திய யாத்திரை செய்தார். குருதேவர் செய்த திக்விஜயம் திவ்ய ஜீவன சங்கச் சோலையை மேலும் செழிப்புறச் செய்தது. வடநாட்டு யாத்திரையில், பைஸாபாத், காசி, சாரநாத் பாட்னா, ஹாஜிப்பூர், காயா, கல்கத்தா, வால்டெர் இராஜமகேந்திரம், விஜயவாடா, மதுரை ஆகிய இடங்களில் சுவாமியின் அருளுரைகளை பல்லாயிரக்கணக்கான மக்கள் கேட்டு, ஆத்மீக லாபம் பெற்றின்புற்றனர். அங்கிருந்த தெய்வ நெறிக்கழகங்கள் புத்தூர்க்கம் பெற்றன. புதிய பல சங்கங்கள் அமைக்கப்பட்டன. தெய்வ நெறிக்கழகத்தின் இலட்சியங்கள் மக்கள் மனதிற் பசுமரத்தாணிபோல் நன்கு பதிந்தன. அவற்றைக் கேட்ட அளவில் நின்று விடாது, ஆர்வமுடன் அப்பணியில் மக்கள் ஈடுபட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடநாட்டில் அருளொளி பரப்பிய குருதேவர் 1950 ஒக்டோபர் மாதம் தென்னாட்டிற்கும் விஜயம் செய்தார். பேரானந்தம் பிரவாகிக்க, மக்கள் சுவாமி சிவானந்த மகராஜ் அவர்களை வரவேற்றார்கள். சென்னை விழுப்பும், தருமபுரம், தஞ்சை, நாகப்பட்டனம், திருச்சி, புதுக்கோட்டை, கோயம்புத்தூர், தனுஷ்கோடி ஆகிய இடங்கள் மகிழ்ச்சி பொங்க சகத் குருவை வரவேற்ற சிறப்பு எழுத்தில் அடங்காது. அங்கே இன்றும் பல தெய்வ நெறிக் கழகங்கள் பெரும்பணியாற்றி வருகின்றன.

1950 அக்டோபர் 12ம் திகதி ஸ்ரீ சுவாமி சிவானந்தமகராஜ் இலங்கைக்கு விஜயம் செய்தார். கொழும்பு மாநகரசபை, இலங்கை சர்வகலாசாலை இந்து மாணவர் சங்கம், ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கம், சைவ மங்கையர் கழகம், விவேகானந்த சபை என்பன அன்புடன் வரவேற்றன.

இறைவன் திருவருளும் ஸ்ரீ சற்குரு சிவானந்த மகரிஷியின் நல்லாசியும் பெற்று திவ்ய ஜீவன சங்கம் இலங்கையின் கீழ்த்திசையில் 1953ம் ஆண்டு தோன்றிய பெருமை திருக்கோணமலைக்கே உரியது. இது ஆரம்பமாகிச் சிறந்த பணியாற்ற ஆதிகாரணமாக இருந்து அயராது அரும்பணி ஆற்றியவர்கள் ஸ்ரீ சிவானந்த சச்சிதானந்த மாதாஜி அவர்களும், ஸ்ரீ சுவாமி சச்சிதானந்த யோகிராஜ் அவர்களுமாவர்.

ஓம் எனும் ஒலியானது உலகெங்கும் எதிரொலிக்கின்றது. இந்நாதம் அருள்பெற்றவர்கள் காதுக்கு மட்டுமல்லாது எல்லாத் தேசங்களிலும். எல்லா மதத்தினராலும் செவிமடுக்கப்படுகிறது. இறைவனை நாடி நிற்போர் இன்னும் உயர்ந்த பல அற்புதங்களைக் காண்கின்றனர். அன்பு வாழ்க்கை, தன்னலமற்ற சேவை, அறிவு, ஆற்றல் இவைகளின் கருவூலமாக விளங்கும் காரணத்தினால் சுவாமி சிவானந்தர் உலகுக்கே ஒரு புது தோற்றத்தை கொடுத்திருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரிய புராணத்தில் சிவ வழிபாடு

**சிவ:சண்முகவடிவேல்**

சிவபெருமானை வழிபடுதல் இருவகைப்படும் ஆன்மார்த்த வழிபாடு பெரும்பாலும் ஆன்ம இடேற்றத்தைப் பற்றியதாகும் பரார்த்த வழிபாடு, பூசை உலக நலனை உயிர்நாடியாக கொண்டது. திருநாவுக்கரசு நாயனார் அருளிச்செய்த திருக்குறுந்தொகை தேவாரம், திருக்கோவில் திருப்பணி செய்யும் அருமை பெருமையைப் பணிவுடன் அற்றும் பான்மையை நன்கு வலியுறுத்தும்.

**"நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்**
**தென்க டம்பைத் திருக்கரக் கோயிலன்**
**தாங்க டன்னடி யேனையுந் தாங்குதல்**
**என்க டன்பணி செய்து கிடப்பதே."**

இறைவனுடைய கடமை ஆன்மாவைத் தாங்கிக் கொள்ளுதல். ஆன்மாவின் கடமை ஆணவக் கலப்பில்லாமல் தன்னை இறைபணியில் நிற்றல். என்பதாகும். இறைபணியில் தன்னை ஈடுபடுத்தும் போதிலும் இறைபணிசெய்து நிற்றல், இறைபணி செய்து இருத்தல், இறைபணி செய்து நடத்தல், என்று ஓதவில்லை. இறைபணிசெய்து கிடத்தல் என்று அருளிச்செய்தார் திருநாவுக்கரசு நாயனார். கிடப்பதே என்றும் வார்த்தை இறை பணியில் ஈடுபடும் போது மலக்கலப்பால் மனத்தில் உருவாகும் மமதயை மடக்க தலை எடுக்கவிடாமல் தடுக்கும் தன்மையை உணர்த்தும் உள்கருத்து ஓர்ந்து இன்புறத் தக்கது.

இறை தொண்டு வளர வளர வளர்ந்திருக்கும் ஆணவ மலம் மெல்ல மெல்லத் தேய்ந்து அற்றுப் போதல் சிவப்பணியின் பலனைப் பெற்றுக் கொள்ள நமக்கு உணர்த்தும் நல்ல வாய்ப்பு என்பதனை நழுவ விட்டுவிடல் ஆகாது.

**பணியுமா மென்றும் பெருமை சிறுமை**
**பணியுமாந் தன்னை வியந்து - (978) என்னும்**

திருக்குறள் கருத்தை இந்த இடத்து ஒப்பு நோக்கி இன்புறப்பாலது. அந்தப் பெரிய தொண்டர் தம்மைத் சிறுதொண்டர் என்று பணிவு கொண்டார் என்றால் பணிவுடைமையின் பெருமை என்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோயில் வழிபாட்டிலும் சரி திருக்கோயில் திருத்தொண்டிலும் சரி தொண்டில் தம்மை ஈடுபடுத்தியவர்கள் தம்பெருமை சாற்றுமை பெருமை தரும் என்பது இதனால் சைவ இலக்கிய நயமாக பெற்றும்.

இவ்வாருக ஆணவக் கொடுபிடி இல்லாமல் ஆற்றப்படும் திருக்கோயில் வழிபாட்டை விரிந்துரைக்கும் திருநாவுக்கரசு நாயனார் திருவாவூர் திருப்பதிகம் ஒன்றில் ஒரு திருத்தாண்டகத்தில் பின்வருமாறு தெளிவுபடுத்துவார்.

**"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா**
**நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்கும்**
**புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்**
**பூமாலை புனர்ந்தேத்திப் புகழ்ந்து பாடித்**
**தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்**
**சங்கரா சய போற்றி போற்றி யென்றும்**
**அலைபுனல் சேர் செற்சடையெம் ஆதீ என்றும்**
**ஆரூரா என்றென்றே அலரு நில்லே"**

திருநாவுக்கரசுநாயனார் சரியைத் தொண்டிற்குத் தந்த இந்தப் பொருள் பொதிய திவுஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பிறிதொரு தன்மையாக பேசிப் பாடுவார் அது வருமாறு காண்க:

**"நீநாளும் நன்நெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்**
**சாநாளும் வாழ்நாளுந் சாய்க்காட்டெம் பெருமாற்கே**
**பூநாழும் தலைசுமப்பப் புகழ்நாமற் செவி கேட்ப**
**நா நாளும் நாவின் றேத்தப் பெறலாமே நல் வினையே."**

எம்பெருமக்கள் இருபேரும் சிவப்பணித் தொண்டு பாடிய அப்பொருளையே மாணிக்கவாசக சுவாமிகள் எதிர் மறைப்பொருளில் விளக்கித் திருவாசகத்தில் ஒருவாசகமாக ஓதியருளவார். அது வருமாறு:-

**ஆடு கின்றிலை கூத்துப்படை யான்கழற்**
**கன்பிலை யென்புருகிப்**
**பாடு கின்றிலைப் பதைப்பதுஞ் செய்கிலை**
**பணிகிலை பாதமலர்**
**சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை**
**துணையிலி பிணைநெஞ்சே**
**தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை**
**செய்வ தொன் றறியேனே**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவப்பணிப் பயிற்சியினால் சித்த சுத்தி ஏற்படும் பொருட்டேயாம் சித்த சுத்தி தெளிவுபடாத மன அழுக்காளே அறியாமையின் பின்னனியாகும்.

சித்த சுத்தியில் நின்று திருத்தொண்டாற்றிய நாயன்மார்களைப் பெரியபுராணம் பெரிதும் போற்றும். நாயன்மார்கள் நியம ஒழுங்கில் நின்று தலயாய தமது தொண்டு வழுவாதவர்கள். பூமலர் மரங்களை உண்டாக்குதல், பேணிப் பாதகாத்தல் நீர் பசளை இட்டு மரங்களை வளர்த்தல், மலர் பறித்தல் மாலை சமைத்தல் போன்ற அரும் பணிகளைப் பெரியபுராணம் பெரிதும் விரிந்துரைக்கும்.

திருவானிலையில் எழுந்தருளி இருக்கும் சிவபிரானுக்கு நியமம் வழுவாமல் பூப்பறித்து மாலைதொடுத்துச் சாத்துவர். சிவகாமி ஆண்டார் என்னும் அந்தணச் சிவபக்தர்.

சிவகாமியண்டார் சிவழிபாட்டிற்குப் பூப்பறிக்கும் செய்தியினைப் பின்வருமாறு புகழ்ந்து போற்றும் பெரியபுராணம்,

**வைகறை புணர்ந்து போந்து**
**புனன் மூழ்கி வாயும் கட்டி**
**மொய்மலர் நெருங்கு வாச**
**நந்தன வனத்து முன்னிக்**
**கையினற் றெரிந்த நல்க**
**கமழ்மகை யலரம் வேலைத்**
**தெய்வநா யகர்க்கச் சாத்துந்**
**திருப்பற்றித் தாமங் கொய்து**

பொழுது புலர்வதன் முன் எழுதல், நீராடல், வாய்கட்டல், போன்ற செய்கைகள் மலர்கொய்தலுக்கு இன்றியமையாமை நோக்கற் பாலது.

# வளரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகன் துணை

## புடவையகம்

யாழ் சாலை — கிளிநொச்சி

பதிவிலக்கம் வ/சி 3067



அனைத்து வகையான புடவைகளின்
தெரிவுக்கு நீங்கள் நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்



# OCEANICK IMPEX

192, MAIN STREET,
COLOMBO - 11
SRI LANKA.

Tel : 2336720
2327168
WHOLESALE 2384131
FAX : 2326961
E-mail : oceanick 192@yahoo.com

Authorised Sole Distributors For

ACCURATE LUNGHI COMPANY CHENNAI - INDIA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# POOBALASINGHAM BOOK DEPOT



**IMPORTERS, EXPORTERS, SELLERS & PUBLISHERS, OF BOOKS, STATIONERS AND NEWS AGENTS**

340, 352, Sea Street,
Colombo 11, Sri Lanka,
Tel : 422321
Fax : 337313
E.mail : pbdho@sltnet.lk

Branches :
309 A-2/3, Galle Road,
Colombo 06, Sri Lanka.
Tel : 074- 515775
4A, Hospital Road,
Bus Stand, Jaffna.




**பசுவதையை நிறுத்துவோம்**
**பசுவைக் காப்போம்.**



**ஒரு பசு 1000 பேருக்கு பால் கொடுக்கும்**
**ஒரு பசுவைக் கொன்றால் 25 பேர் சாப்பிடுவர்**


இச்சஞ்சிகை ஏழாலை ஆத்மஜோதி தியான மணிமண்டப சபை திரு.நா.முருகையா அவர்களால்
இல:351 மணிக்கூண்டு வீதி யாழ்ப்பாணம்; ஐய்ராம் பிறின்ரேஸ் ஸ்தாபனத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org